# பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீட சபையால் அனைத்துக் கலைப் பீட மாணவர்களுக்குமென வெளியிடப்பட்ட அறிக்கை

கலைப் பீடத்தின் ஒவ்வொரு மாணவரும் பீடம் மற்றும் பல்கலைக்கழகத்தின் அனைத்து பொது வசதிகள் மற்றும் பகுதிகளுக்கு, இலவசமானதும் முழுமையானதுமான அணுகலைப் பெற வேண்டும் என்ற கொள்கை ரீதியான நிலைப்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், அனைத்து வகையான துன்புறுத்தல், அச்சுறுத்தல் மற்றும் பாகுபாடு ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்கான மாணவர்களின் அடிப்படை உரிமையில் உறுதியாக உள்ள நிலையில், அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரியான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் பீட சபையானது,

மாணவர் குழுக்களும் தனிநபர்களும் பல்கலைக்கழகத்தின் பொதுவான மற்றும் பகிரப்பட்ட வசதிகள் மற்றும் வளங்களை பிற மாணவர்கள் அனுபவிப்பதிலிருந்து வலுக்கட்டாயமாக தடுப்பதையும் பயமுறுத்துவதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம். 14.09.2022 அன்று இரண்டு தனித்தனி சம்பவங்களில் கலைப் பீட உணவகத்தில் (கெம்பா கேன்டீன்) மதிய உணவு சாப்பிட முயன்ற சக மாணவர்களுக்கு எதிராக மாணவர் பிரிவினரால் மிருகத்தனமான மற்றும் மனிதாபிமானமற்ற செயல்கள் நடத்தப்பட்டன. அந்த நேரத்தில் கல்விசார் ஊழியர்கள் இருந்தபோதிலும் வெளிப்படையாக இந்த மீறல் நடைபெற்றது.

அத்துடன்,

முந்தைய நாளின் மிருகத்தனமான தாக்குதல்கள் மற்றும் அப்பட்டமான சட்டவிரோதச் செயல்களைத் தடுக்க பீடமானது நடவடிக்கை எடுத்தமை காரணமாக, 15.09.2022 அன்று, பீடாதிபதிக்கும் பீடத்தின் பிற உறுப்பினர்களுக்கும் எதிராக தீங்கிழைக்கும் தனிப்பட்ட தாக்குதல்கள் மூலம் கலை பீடத்தை மோசமாக அவமானப்படுத்தவும் இழிவுபடுத்தவும் பீட வளாகத்தை தவறாகப் பயன்படுத்திய மாணவர்களின் கோழைத்தனமான செயல்களை உறுதியாகவும் சந்தேகத்திற்கு இடமின்றியும் பீடத்தின் சபை கண்டிக்கிறது. கலைப் பீடத்தின் நம்பகத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டை வேண்டுமென்றே குழிதோண்டிப் புதைக்க முயல்வதை பொறுத்துக் கொள்ள முடியாது என்றும், மாணவர் அமைப்பில் எந்த பதவியை வகித்த போதும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த முழுமையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என்றும் பீடத்தின் சபை இதன் மூலம் மாணவர்களுக்குத் தெரிவிக்கிறது.

அத்துடன்,

இவ்விடயம் குறித்து ஆலோசிப்பதற்கு, கலைப்பீட மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் மாணவர்கள், 20.09.2022 அன்று நடைபெற்ற விசேட பீட சபைக் கூட்டத்தில் தாம் கலந்து கொள்வதாக அன்றைய தினம் காலையில் நடைபெற்ற துறைத் தலைவர்களுடனான சந்திப்பில் ஒப்புக் கொண்டபோதும், அந்த ஒப்புதலையும் புறக்கணித்து அன்றைய தினம் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளாமை குறித்து, பீடச்சபை கவலையையும் அதிருப்தியையும் வெளிப்படுத்துகிறது. தாங்கள் ஏன் வரவில்லை என்பதற்கான காரணத்தை அவர்கள் கூட்டம் ஆரம்பிக்க முன்னர் பீடாதிபதியிடம் தெரிவிக்கவில்லை, அதற்குப் பிறகும்கூட விளக்கமும் அளிக்கவில்லை. இதன் மூலம் கூட்டத்தின் நோக்கத்தை வேண்டுமென்றே குறைமதிப்பிற்கு உட்படுத்துதல் மற்றும் தற்போதைய நெருக்கடியைத் தீர்க்கும் முயற்சியை நாசப்படுத்தல் ஆகியனவே இடம்பெற்றுள்ளன. வெகுஜன ஊடகங்களூடாக நாளாந்தம் கலைப்பீடத்திற்கு வரும் எதிர்மறையான பிரபல்யத்தின் வெளிச்சத்தில், தீர்வொன்றை எட்டுவதைத் தாமதப்படுத்தும் இந்த தந்திரோபாயமானது, பிரச்சினையை நீடிப்பதற்கும் அதன் மூலம் பீடத்திற்கு மேலும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் முயற்சியாக மட்டுமே பார்க்கப்படுகின்றது.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், கவனமாகவும் விரிவாகவும் விவாதித்த பிறகு, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் பீடச்சபை தனது தீர்மானத்தை பின்வருமாறு ஏகமனதாக உறுதிப்படுத்துகிறது:

1. அனைத்து குழுவின் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களின் அனைத்து மாணவர்களும், தத்தம் அடையாளங்கள், இணைப்புகள் மற்றும் முன்னோக்குகளைப் பொருட்படுத்தாமல், நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்டவையும் பீடம் மற்றும் பல்கலைக்கழக இடங்களில் உள்ளவையுமான அனைத்து பொது வசதிகளையும் பயன்படுத்தல் மற்றும் அவ்விடங்களை அணுகல் ஆகியவற்றுக்கான பிறரின் உரிமையை கட்டுப்படுத்தும் வகையில் எவராலும் எத்தடையும் விதிக்க முடியாது என்ற கொள்கையைத் தீவிரமாக கடைப்பிடிக்க வேண்டும். அத்தகைய குழுக்கள் அனைத்தும் இம்முடிவுக்குக் கட்டுப்படும் என்பதை, அக்குழுக்களின் மாணவர்கள் கூட்டாக கலைப்பீடத்தின் பீடாதிபதிக்கு சமர்ப்பிக்கக்கூடிய எழுத்துப்பூர்வ உறுதிமொழி மற்றும் ஒப்பந்தத்தின் மூலம் நிறுவ வேண்டும். குறிப்பாக, கலைப் பீட மாணவர் ஒன்றியம் தாங்கள் மாணவர்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வதால் இந்தக் கொள்கையை ஏற்று எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்டாக வேண்டும்.

2. மாணவர்களின் பாலினம் அல்லது அவர்களின் அரசியல், சித்தாந்தம், மதம், கலாச்சாரம், மொழி அல்லது பிற மதிப்புகள் மற்றும் முன்னோக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில், அவர்களின் குழுக்களுக்கு இடையே எந்த பாகுபாடும் இருக்கக்கூடாது. மாணவர்களின் பொது உரிமைகள் மற்றும் சலுகைகள் தொடர்பாக, குழுவில் உறுப்பினர்களாக இல்லாத மற்றவர்களைப் பாதிக்கும் வகையில் எந்தக் குழுவின் உறுப்பினர்களும் சிறப்புச் சலுகைகளை வழங்கக்கூடாது. அனைத்து மாணவர் அமைப்புகளும் பல்கலைக்கழக விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். அதே வேளை, மற்றவர்களின் உரிமைகளையும் மதிக்க வேண்டும். மேலும் இதுபோன்ற பாகுபாடு அல்லது முன்னுரிமைப் பழக்கங்கள் கடந்த காலங்களில் பின்பற்றப்பட்டு இருந்திருந்தால், அவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3. அனைத்து மாணவர்களும், குறிப்பாக கலைப்பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மாணவர் அமைப்புகள் சார்பாக அவர்களின் பிரதிநிதிகள்அனைவரும், செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குள் மேலே உள்ள 1 மற்றும் 2 அறிக்கைகளை முறையாக ஒப்புக்கொண்டு, எழுத்துப்பூர்வமாக தமது ஒப்புதலை அளிக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படாவிடின், மறு அறிவிப்பு வரை, மாணவர்களுடனான அனைத்து கல்விப் பணிகளையும் (இணையவழியாக அல்லது பௌதிக ரீதியாக விரிவுரைகளை நடத்துதல், கலந்துரையாடல் வகுப்புகள், செயன்முறைகள் மற்றும் தொடர்புடைய பிற நடவடிக்கைகள்) கலைப்பீடமானது இடைநிறுத்தும்.

அனைத்து மாணவர்கள் மற்றும் பீட ஊழியர்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் உறுதி செய்வதற்கு சாத்தியமான கொள்கை ரீதியான மாற்று எதுவும் இல்லாமை காரணமாக, கடைசி முயற்சியாக வருத்தத்துடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஜே. எம். ஆனந்த ஜயவிக்ரம
பதில் பீடாதிபதி
கலைப்பீடம்
22/09/2022